# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை (கூட்டிணைத்தல்)

**ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம அவர்களால் 2016, சனவரி மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[ 65 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை (கூட்டிணைத்தல்)

## ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபையைக் கூட்டிணைப்பதற்கான ஒரு சட்டம்

முன்னுரை.

''ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவது மான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள் ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சபை தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத் தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சபை எப்பல்வேறு குறிக்கோள்களுக் காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ, அப்பல் வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றி கரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாத லாலும், அது கூட்டிணைவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப்பெயர்.

***1***. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை கூட்டிணைத்தல்.

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபையின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர் களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களு மான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும்,

இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராகவும் வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை, சுகதா இளைஞர் பௌத்த சங்கம், சுகத்குலங்கனசபை, மைத்திரிபால சேனநாயக்க ஞாபகார்த்த பழச்சோலை ரஜமகா விஹாரகாரிய சுதகா சபை, ரீபன்கரா அறநெறிப் பாடசாலை, ஹந்தல ரஜமகா விஹார பெரகரா ஒழுங்கமைப்பு குழு, ஞான விமல கிராம, சமூக அபிவிருத்தி சங்கம், ஹந்தகல சதார பேருவ இறப்பு நலன்புரிச்சங்கம் ஆகியவை பௌத்த மக்களின் சமய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதுடன் இப்பிரதேச மக்களின் சமூக பொருளாதாரச் செயற்பாடுகளையும் மேம்படுத்தும் இந்நிறுவனங்களின் தேவைகளையும், பராமரிப்பையும், மேற்கொள்வதற்கு மேற்கூறிய நிறுவனங்களின்மூலம் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்தலும், தாகாபாக்களை உருவாக்குதலும், புத்தர் சிலைகளை உருவாக்குதலும், கூரை அமைத்தலும், சுற்றுவட்டத்தை ஒரு பழச்சோலைபோல அமைத்தலும், மத கலாசார அம்சங்களில் முக்கிய இடமாக மாற்றி அதனைப் பாதுகாத்தலும்.

(இ) இப்பிரதேசத்தில் வாழும் கஷ்டப்படும் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள், சுகாதாரம், சுத்தமான நீர் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் ;

(ஈ) இம்மாவட்டத்தில் வாழும் ஏழை மக்களின் பிள்ளை களின் கல்விக்கு உதவுதல் ;

(உ) உறுப்பினர்களின் ஆத்மீக, பண்பாட்டு, சமூக அத்துடன் உடல்சார் சேமநலனுக்கான செயற்பாடுகளை மேம் படுத்துதலும், ஊக்குவித்தலும் அதில் உதவிபுரிதலும் ;

(ஊ) பௌத்த சமயத்தைப் பாதுகாத்தலும் பராமரித்தலும் ;

(எ) குருமாருக்கு ''தம்ம''வையும், ''வினய''வையும் கற்பித் தலும் யோகாசன அப்பியாசங்களில் அவர்களுக்குப் பயிற்சியளித்தலும் பாளி, சிங்களம் மற்றும் ஏனைய கீழைத்தேய, மேற்கத்திய மொழிகளில் அவர்களைத் தேர்ச்சியுள்ளவர்களாக்குதலும் ;

(ஏ) இளம் சந்ததியினருக்கு ''தம்ம'' பற்றிய அறிவை வழங்கு வதற்கு ''தம்ம'' பாடசாலைகளைத் தாபித்தலும் ;

(ஐ) புத்தரின் போதனைகளில் அடங்கியுள்ள செய்தியை எடுத்துச் சொல்லுதல் அத்துடன் உலக சமாதானத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு பௌத்த கலாசாரத்தைப் பரப்புதலும் ;

(ஒ) கல்வி, கலாசாரம் பரப்புகை, நிலைத்து நிற்றல், அபிவிருத்தி, சமாதானம் ஆகியன தொடர்பிலான உலக விவகாரங்களின்மீது அரசாங்கம் சார்ந்த, அரசாங்கம் சார்பற்ற சர்வதேச ஒழுங்கமைப்புக்களி னாலும், அவை சமய ஒழுங்கமைப்புக்காளக இருந் தாலும் சரி சமயச் சார்பற்ற ஒழுங்கமைப்புக்களாக இருந்தாலும் சரி கூட்டப்படும் மாநாடுகளிலும், கருத் தரங்குகளிலும், உலக பௌத்த சமுதாயத்தினரின் சார்பில் ஏதேனும் விடத்தின்மீது பௌத்த கருத்து நோக்கினைச் சமர்ப்பித்தலும் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரையும் அவ்விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்ட வேறு ஆறு பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரையும், கொண்ட முகாமைக்குழுவொன்றின்மூலம் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். விஹாரையின் பிக்கு ஒருவர் குழுவின் தவிசாளராதலும் வேண்டும்.

(2) ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரையின் பிரதான வணக்கத்துக்குரிய மதகுருவும், பதவிய சுதர்சநராமய மதகுருவுமான வணக்கத்திற்குரிய கிரிமத்தியாவ ஞான விமலதேரர் என்பவர் இவ்விகாரையின் நிர்வாகசபையின் சிரேஷ்ட தலைவராக செயற்படுவார் வணக்கத்திற்குரிய ஹெந்தவ சமித்ததேரர் என்பவரும், இக்கூட்டிணைப்பில் பிரதான நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றுவார்.

(3) இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச் சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்தவர்கள் சபாவின் முகாமைக்குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு, தேவைப்படும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி, பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளும், பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடுசெய்யவும், தேவையான ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கு அமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கான தத்தவங்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை சீர்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத்தேவையான அல்லது தகுந்த எந்த வகையிலேனும் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் செயற்படுத்துவதற்குமான தத்தவமும் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், மொத்த வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களைப் பதவிநீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும், கடமைகளும் பணிகளும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும்;

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமைசெய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதே போன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றைப்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று வலு விலுள்ள சபாவின் விதிகள் அவை இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத் திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள் ளனவுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சபைக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத்தீர்க்கப் படுதலும் வேண்டும் என்பதுடன் சபைக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் வருமானங்களும் செலவுகளும் மற்றும் சொத்துக்களும், பற்றுக்களும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான உரிய கணக்கேடுகளில் பதியப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தால் ஒழுங்குகள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகுதிவாய்ந்த கணக்காய் வாளர் ஒருவரால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு ஆண்டும் கூட்டுத்தாபனத்தில் கணக்காய்வாள ரால் கூட்டுத்தாபனத்தின் ஆண்டிறுதிக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படவேண்டியதுடன், அந்தக் கணக்காய்வு அறிக்கை அடுத்துவரும் மகாசபைக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

**9**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, குத்தகை அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல் லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக்குழு வின் ஓர் உறுப்பினரினதும் கௌரவ செயலாளரினதும் அல்லது முகாமைக்குழுவால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலும் அன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதலில் எவரேனும் ஆள் சாட்சி யொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களையும், உரிமைகளையும் பங்கப்படுத் தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. *குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**12**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்பணம் அத்தியட்சகர்,* அரசாங்க வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்